மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்போது அமைக்கப் படயிருக்கிற மாற்றுவழிச்சாலை மத்திய அரசு நிதியில் இருந்து தேசீய நெடுஞ்சாலைத் திட்டத்தில் மேற்கொள்ளப் பட இருக்கிறது. அந்த மாற்றுவழிச்சாலையை தேசீய நெடுஞ் சாலைப் பிரிவு ஏற்றுக் கொண்ட பிறகு ஏற்கெனவே இருந்த பாலம் மாநில அரசுக்கு உட்பட்டு வந்துவிடும். பிறகு அந்தப் பாலத்தை அகலப்படுத்துவது பற்றி யோசிக்கலாம்.

பட்டனப்பாக்கத்தில் கடல் அரிப்பு

* 316 வினு: திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா : திரு. எஸ். கணேசன் :

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆகஸ்டு மாதம் கடைசி வாரத்தில் பட்டினப்பாக்கம் பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) பட்டினப்பாக்கம் பகுதியில் அகில இந்திய வானெலி யையும் ஓசியானிக் ஓட்டலையும் இணைக்குமிடத்தில் கடற்கரை சாலையில் ஆகஸ்டு 1977-ல் சுமார் 60 மீட்டர் நீளத்திற்கு கடல் அரிப்பு ஏற்பட்டு சேதமடைந்துவிட்டது. இக்கடல் அரிப்பு நெடுஞ்சாலை கிராமப்பணித்துறையினரால் உடனே துரிதகதியில் கவனிக்கப்பட்டு ரூபாய் 1.23 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப் பட்டுவிட்டது. அக்டோபர் 1977-ல் பெய்த பெருமழையின் காரணமாக இச்சாலையில் மீண்டும் கடல் அரிப்பு ஏற்பட்டது. இதனைப் பழுதுபார்க்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறி யாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா : இந்த கடல் அரிப்பை பழுதுபார்ப்பதாகச் சொல்கிருர்கள். கடலரிப்பைத் தடுக்க கற்களைப் போடுவதா ? அந்தச் சாலை இரண்டு முறை பழுத டைந்துவிட்டது. எனவே அந்தச் சாலையை நல்ல முறையில் மீண்டும் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படுமா ? மேலும் மாற்றுச்சாலையில் உள்ள மின்சார விளக்குகள் பல மாதங்களாக எரியவில்லை, அதை எரியச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 7.7 இலட்சம் ரூபாய் செலவில் அந்தப் பகுதியை மீண்டும் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மின் விளக்குகள் எரியவும் நடவடிக்கை எடுக்கப்படும்.